**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு,**
**திருவண்ணாமலை மாவட்டம்.**
**அசல் வழக்கு எண்.54/16**

2023-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 9-ம் நாள் வாதி/பிரதிவாதி சாட்சியாகிய, திருமதி.வசந்தா, என்பவரின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 54-வது விதியின் 9-வது பிரிவின்படி திரு.ஆ.தீர்த்தமலை, இளநிலை உதவியாளர் என்பவரால் உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் | - திருமதி.வசந்தா, |
| வயது | - |
| தந்தை/கணவர் பெயர் | - க.பெ.குப்பன் |
| கிராமம் | - கிளார் |
| வட்டம் | - |
| சாதி | - |
| சமயம் | - |
| தொழில் | - |

09.02.2023
வா.சா.1.
**1, 2, 4 மற்றும் 7ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி.**

பாகம்கோரி தான் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்துக்கள் என் மாமனார் ஐயாகண்ணுக்கு பாத்தியப்பட்ட சொத்து. இந்த சொத்து என் மாமனாருக்கு பூர்வீகமான சொத்து. என் மாமனார் கிரையம் எதுவும் பெறவில்லை. என் மாமனாருக்கு என் கணவரும், சின்னபையன் என்பவரும் மகன்கள். பஞ்சம்மாள், சாந்தி ஆகியோர்கள் மகள்கள். மகள்கள் இருவரும் வெகு காலத்திற்கு முன்பு இறந்து விட்டார்கள். என் மாமனார் உயிருடன் இருக்கும் காலத்தில் என் கணவர் குப்பனுக்கு சொத்துக்கள் பாகமாக கொடுத்தார் என்றால் சரிதான். என் மாமனார் உயிருடன் இருக்கும்போது ஒரு சில சொத்துக்களை விற்பனை செய்து என் கணவருக்கு கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல.

2) நான் காஞ்சிபுரம் தாலுக்கா கிளார் கிராமத்தில் வசிக்கிறேன். அங்கு எனக்கு வீடு உள்ளது என்றால் என் அப்பா எனக்கு வாங்கி கொடுத்த வீடு அது. நெல் அறுவடை செய்யும் இயந்திரம் எதுவும் என் பெயரில் இல்லை. என் கணவருக்கு இரண்டு மனைவிகள். முதல் மனைவி முனியம்மாள் இறந்த பிறகு என்னை திருமணம் செய்துகொண்டார். என்னை 2வது திருமணம் செய்தபோது எனக்கு சொத்து ஆதரவு செய்து வைக்கவேண்டும் என்று என் குடும்பத்தார் கேட்டு கொண்டபோது என் மாமனார் திருமணத்தின்போதே பண ஆதரவு கொடுத்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல.

3) திருமணத்தின்போது பணம் என் குடும்பத்தாரிடம் கொடுக்கப்பட்டது என்றும், அதில் என் குடும்பத்தார் சாட்சி கையொப்பம் இட்டு பணத்தை பெற்றுகொண்டார்கள் என்றால் சரியல்ல. முதல் மனைவிக்கு பிள்ளைகள் உள்ளதால் அந்த பணத்தை நாங்கள் அப்போது பெற்றுகொள்ளவில்லை. என் மாமனாரும், என் கணவரும் உயிரோடு இருந்த காலத்திலேயே சொத்துக்கள் பிரிக்கப்பட்டு எங்களுக்கான பாகம் கொடுக்கப்பட்டுவிட்டது என்றும், அதை மறைத்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எனவே பாகம்கோரி தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு 1, 2, 4 மற்றும் 7 பிரதிவாதிகளின் செலவு தொகையோடு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

11, 12 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு வசிாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.